www.padippakam.com



# தலைவி

இணைந்த கரங்கள்
பெண்கள் விழிப்புணர்ச்சி
இணையங்களின் ஒன்றியம்
செய்திமடல்

செங்கோல் 2 மன்றம் 6

ஏப்ரல்-மே 2004


## தலைவியின் பார்வையில்............

கடந்த மார்ச் மாத இதழ் தேர்தல்கள் காரணத்தினால் தாமதமாகவே பல மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டது. கிழக்கில் நிகழ்ந்த அசம்பாவிதங்களால் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஏப்ரல் 15ம் திகதியளவில்தான் செய்தி மடல்கள் சென்றடைந்தன. இக்காரணத்தினால் ஏப்ரல் மாத இதழைச் சற்றுத் தள்ளிப்போட்டு இந்தமுறை ஏப்ரல்–மே இதழாக பன்னிரெண்டு பக்கங்களில் உங்களுக்குத் தருகின்றோம். நிற்க.

மார்ச் மாத இதழில் பிரதேசவாதத்தினைப் பற்றி நாம் எழுதிய காரணத்தினால் பல சகோதரிகள் எம்முடன் தொடர்பு கொண்டிருக்கின்றனர். குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பல பதிற்குறிகள் எம்மை வந்தடைந்திருக்கின்றன. மிக நியாயபூர்வமான எதிர்வாதங்களை சகோதரிகள் முன்வைத்திருக்கின்றனர். இந்த விடயத்தை இன்னும் விளங்கிக்கொள்ள உதவிய அவர்களுக்கு நன்றி கூறி அவற்றை முழுவனே நாம் இந்த இதழில் பிரசுரிக்கின்றோம். பிரதேசவாதம் பற்றிய விவாதத்தினை எங்கள் பிரதான அம்சமாக நாம் அடுத்தடுத்த தலைவி செய்தி மடல்களிலும் தொடர உத்தேசம் கொண்டுள்ளோம். அதைப் பற்றிய கருத்துக்கள் இருந்தால் எழுதுங்கள்.

மேலும், ஏப்ரல் மே மாதங்களில் நடந்த இரு முக்கிய சம்பவங்களையும் இம்மாத இதழில் நினைவு கூருகின்றோம். ஒன்று கடந்த மாதம் நடைபெற்ற இலங்கையின் 13வது பாராளுமன்றத் தேர்தல்கள். மற்றையது மே மாதம் 1ந் திகதி, ஈராக் ஆக்கிரமிப்பு யுத்தத்தின் முடிவின் ஓராண்டு நிறைவு தினமாகும்.

தான் ஜனாதிபதியாகப் பதவியில் அமர்ந்தால் மட்டும் போதாது தான்தான் எந்த அரசியல் நிகழ்வுக்கும் நடுநாயகமாக அமர்ந்திருக்கவேண்டும் என்ற இறுமாப்பினால் இத்தனை கோடி ரூபாய்களைச் செலவழித்து தேர்தல்களைக் கூட்டினார் சந்திரிகா. கடைசியில் தொங்கு பாராளுமன்றமாக, ஜேவிபி கட்சி இழுத்த பக்கமெல்லாம் இழுபட வேண்டிய நிலை பிள்ளையார் பிடிக்கக் குரங்கான நிலைமை. இது தொடர்பாக நாம் ஒரு சிறிய போட்டியொன்றை வைக்கின்றோம். அதன் விவரங்கள் இந்த மடலில் தரப்படுகின்றன. அவற்றை வாசித்துப் போட்டியில் நீங்களும் கலந்து கொள்ளலாம்.

கடந்த வருடம் மார்ச் மாதம் 20ந்திகதி உலகத்தோரைப் பொறுத்தவரை எல்லோருக்கும் ஒரு கரி நாளாக அமைந்தது. ஆம், தான் ஒரு வல்லரசு தன்னை மிஞ்ச யாருமேயில்லை என்ற அகங்காரத்துடன் ஈராக் மக்களை நசுக்கவென அமெரிக்கப் படைகள் புறப்பட்ட நாள் அது. மக்கள் ஜனநாயகம் என்பது உலகின் குப்பைத் தொட்டியில் வீசப்பட்ட நாள். ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா என்று நாடு நாடாக இதுவரை வரலாறு காணாத மக்கள் வெள்ளம் குவிந்து இப்போரை எதிர்த்தும் கூட அவர்கள் அபிப்பிராயங்களைத் தங்கள் பூட்ஸ் கால்களால் மிதித்துக் கொண்டு அமெரிக்க பிரிட்டிஷ் ஆக்கிரமிப்புப் படைகள் ஈராக்கை கைப்பற்றக் கிளம்பிய நாள்.

அதன்பின் மே மாதம் 1ந்திகதி. ஈராக்கைக் கைப்பற்றி அமெரிக்கர்கள் ஜெய பேரிகை கொட்டிய நாள். அமெரிக்கர்கள் வென்றுவிட்டார்கள் என்று உலகமெல்லாம் நம்பியிருந்த வேளை தலைவி தனது செய்தி மடலில் கூறியதைச் சிறிது நினைவு கூர வேண்டுகின்றோம். சும்மா நிலத்தை ஆக்கிரமித்து விட்டால் போதுமா? மக்களை வெல்ல வேண்டுமே. அது ஒரு ஆக்கிரமிப்பு அல்லது அடக்குமுறை இராணுவத்திற்கு ஒருபோதும் முடியாது என்று கூறினோம். இன்று, ஒரு வருடம் கழிந்து, மூக்குடைபட்டு ஈராக்கில் இரத்தம் சிந்தி நிற்கின்றது அமெரிக்க வல்லரசு.

இவை வரலாறு எப்பொழுதும் நமக்குக் கற்பிக்கும் பாடம்தான். ஆனால் பாழாய்ப்போன மனித மனம் அதை அடிக்கடி மறந்து விடுகின்றது. தமது கையில் பலம் பொருந்திய ஆயுதங்களையும் அதிகாரங்களையும் தாங்கி நிற்கும்போது **மக்கள் சக்தி** இதையெல்லாவற்றையும் விட மகோன்னதமான பலம் வாய்ந்த சக்தி என்பதை எல்லா தலைவர்களும் மறப்பது ஏன்? அதிகாரம் என்னும் மாயை கண்ணைக் குருடாக்கி விடுகின்றது. இதற்கு விதிவிலக்கு யாருமிலர் போலும். ஈராக்கில் அமெரிக்கா படும் பாட்டையும் இந்த இதழில் சுட்டிக் காட்டியிருக்கின்றோம். வாசித்துப் பயன் பெறுங்கள்.

*துணிந்தெழுங்கள், வெற்றி கொள்ளுங்கள்!*
*பெண்களின் எழுச்சி! சமூகத்தின் உயர்ச்சி!*

வாழ்த்துக்களுடன்,
ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com



# பெண்களுக்கான அரசியல் எதிர்வு கூறல் போட்டி!

அடுத்த பன்னிரு மாதங்களில் இலங்கையின் அரசியல் வானில் என்ன விதமான நிலைமைகள் உருவாகும் என்பதைக் காரண காரியத்துடன் விவரித்து தலைவிக்கு எழுதுங்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, ஜேவிபி, ஹெல உருமய, ஈபிடிபி, புளொட், இத்தியாதி கட்சிகளின் நிலைமையும் எப்படிப் போகும்?

சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடக்குமா இல்லையா? தற்போதைய முன்னணி அரசாங்கம் அதனை எப்படி முன்னெடுக்கும்? ஜேவிபி கட்சியின் நிலைப்பாடு இதில் என்னவாக இருக்கலாம்?

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகள் ஏற்றுக் கொள்ளப்படுமா மாட்டாதா? அந்த யோசனைகளில் எவை ஏற்றுக்கொள்ளப்படக்கூடும் எவை நிராகரிக்கப்படலாம்?

அடுத்த தேர்தல்கள் எப்பொழுது வரும்?

**மேலே தரப்பட்ட கேள்விகளுக்கான பதில்களை உள்ளடக்கி, அடுத்த பன்னிரு மாதங்களில் தோன்றக்கூடிய அரசியல் நிலைமைகளை விவரமாக எதிர்வு கூறும் மிகச் சிறந்த ஆக்கத்திற்கு ஒரு பட்டுச் சேலை அல்லது பட்டுச் சல்வார் முதற் பரிசு காத்திருக்கின்றது!**

**சிறந்த ஆக்கங்களுக்காக ஆறுதற்பரிசு ரூ 1000!**

ஆக்கங்களுக்கான முடிவுத் தேதி ஜூன் மாதம் 20, 2004. பெண்கள் மட்டுமே பங்குபற்றலாம். ஒவ்வொரு ஆக்கமும் கையெழுத்துப் பிரதியெனில் 5 பக்கங்களுக்கு மேற்படாமலும், அச்சுப் பிரதியெனில் 12 pt. அளவு எழுத்தில் மூன்று பக்கங்களுக்கு மேற்படாமலும் எழுதி அனுப்பவேண்டும்.

அவற்றை அனுப்ப வேண்டிய முகவரி:

தலைவி, 69 கோயில் வீதி, குருமன்காடு. வவுனியா.

# பிரதேசவாதத்தால் நிர்க்கதியாகிய போராளிகள்

*-முன்னை நாள் போராளி-*

**த**மிழீழ போராட்டம் என்பது எல்லோர் வாழ்க்கையிலும் (போராளி, பொதுமக்கள்) ஒரு முக்கியமான விடயமாக இருந்தாலும் அதில் முக்கிய பங்கும் உரிமையும் உடையவர்கள் போராளிகளே. ஒரு பொதுமகளாக இருந்து பார்ப்பதை விட அந்நிலையிலே ஒரு போராளியாக இருந்து பார்த்தால்தான் அதன் உண்மைத் தாற்பரியம் என்னவென்று தெளிவாகத் தெரியும். நான் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளியாக இருந்தவள். அதுவும் வன்னியில் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் வழிநடத்தலிலும், மட்டு அம்பாறையில் கருணா அம்மானின் வழிநடத்தலிலும் போராட்டத்தில் இணைந்திருந்தேன். இந்தப் போராட்ட காலங்களில் நான் கண்ட அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்துகொள்ளவேண்டிய காலம் இதுவாகும்.

இந்த பிரதேசவாதம் என்பது எப்போதும் இருந்துகொண்டு வந்த ஒன்றுதான் அது இப்போது கருணா அம்மானால் தோற்றுவிக்கப்பட்டதென்று யாராலும் கூறமுடியாது. இந்தப் பிரச்சினை வெளிக்கிளம்பும் என்பது தலைமைத்துவத்துக்கு முன்னரே தெரியாத ஒன்றல்ல. தீர்க்க தரிசிகள் போன்று எதையும் முன்னரே அறியும் தலைமை இப் பிரச்சினையை இவ்வளவு கொடூரமாகும்வரை அறியாதவர்போல் இருந்தது ஏன்? மட்டக் களப்பில் தினக்கதிர் பத்திரிகை வளாகமே தகர்த்தெறியப்பட்ட போது பேசாத வாய்கள் தினக்குரல் பத்திரிகையின் நூறு பத்திரிகைகள் எரிக்கப்பட்டதற்கு பொங்கி ஒப்பாரி வைப்பது ஏன். இது யாருடைய பிரதேச வாதம்?

நாங்கள் 1997ம் ஆண்டு தலைவரின் அழைப்பின்பேரில் கருணா வின் கட்டளைக்கிணங்க தளபதி சாளி (நிலாவினி) அக்காவுடன் முதன்முதல் படையணியாக வன்னிக்கு சென்றோம். அங்கு சென்றவுடன் தான் இந்த பிரதேசவாதத்தின் முழு வடிவத்தையும் அறிந்தோம். மட்டக்களப்பு பேச்சுவழக்கு எல்லோருக் கும் தெரிந்ததே. நாங்கள் வன்னிக்கு சென்றவுடன் "மறுகா", "கிறுகி" என்னும் வார்த்தைகளை பயன்படுத்தித்தான் கதைத்தோம். ஆனால் அந்த ஒரு வார்த்தையை வன்னி போராளிகள் ஒரு வாரத்திற்கு மேல் எங்களை கதைக்கவிடவில்லை. அதை மட்டம்தட்டி எங்களை அழ வைத்தார்களே தவிர அது எங்களின் பேச்சுவழக்கு என்று ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் மட்டு அம்பாறை விசாலகன் படையணிப் போராளிகளுக்கும் யாழ் சாள்ஸ் அன்ரனி போராளிகளுக்கும் வாய்ச் சண்டை ஒன்று மூண்டு, தேசியத் தலைவர் வரை சென்றது. அவ்வேளை இரு படையணிகளுக்கும் ஒற்றுமையைப் புகட்டியவர் இன்று வேறுபட்டு நிற்கும் கருணா ஆவார்.

அதுமட்டுமல்ல இன்னுமொரு உதாரணம், ஒரு பெரிய சண்டைக்கு மட்டக்களப்பு தளபதி ஒருவர் தலைமைதாங்கினார். மாலதி படையணி, சாள்ஸ் அன்ரனி படையணி, ஜெயந்தன் படையணி என்று மட்டக்களப்பு, யாழ், வன்னி போன்ற எல்லா வடகிழக்கு போராளிகளும் ஒன்றுபட்டு கலந்துகொண்ட மிகப்பெரிய சண்டை அது. இராணுவம் எதிர்ப்புச் செல்தாக்குதல் மேற்கொண்டபோது, அதைத் தலைமை தாங்கியவர் மட்டக்களப்பு தளபதி என்பதால், பொதுவாகவே "மறுகா கிறுகி மடுவுக்க பொசிசன்" என்று கட்டளையிட்டாராம். இதனைக்கேட்ட மட்டு அம்பாறை போராளிகள் பாதுகாப்பாக வங்கருக்குள் பதுங்கினார்களாம். ஆனால் வன்னி, யாழ் போராளிகள் இது விளங்காமல் நின்று செல் அடிவாங்கி வீர மரணம் அடைந்தார்களாம் என்று மாலதி படையணி போராளி கிண்டலாக என்னிடம் கூறினார். ஆனால் நாங்கள் ஒருநாள் கூட ஒரு வன்னி, யாழ் போராளிகளின் மனதைப் பாதிக்கும் அளவுக்கு அவர்களைப் பழித்துக் கூறியதில்லை. பிரதேசவாதம் தீவிரமாக அவர்களுக்குள் இருந்தது அன்று எங்களுக்கு தெரியவில்லை.

நான் கூடுதலாக மாலதி படையணி, சிறுத்தைப் படையணி போராளிகளுடன் தான் வன்னியில் இருந்தேன். அவர்களிடம் நீங்கள்

படிப்பகம்

www.padippakam.com



எந்த ஊர் என்று கேட்டால் கூடுதலான போராளிகள் யாழ்ப்பாணம் என்றே கூறுவார்கள். ஆனாலும் அதற்குள் இருந்த சில போராளிகள் அவர்கள் சொல்வதெல்லாம் பொய், யாழ்ப்பாணம் என்றால்தான் இங்கு மதிப்பு, இவர்கள் முக்கால்வாசி பேரும் வன்னி மன்னார் போன்ற இடத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறினார்கள். அவர்களைப் பார்க்க வரும் பெற்றோரை நாங்கள் சந்திக்க நேர்ந்தால் அவர்களின் அன்பைப் பெறுவதற்காக நாங்களும் யாழ்ப்பாணம் என்று கூறுவதுண்டு. அப்போதுதான் யாழ்ப்பாணத்தில் நல்லூரா என்று கேட்பார்கள். இல்லையென்றால் பேசக்கூட மாட்டார்கள். இதில் யாழ்ப்பாண மேலாதிக்கம் இல்லையென்று கூற முடியுமா? எது எப்படி இருந்த போதும் நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாகத்தான் இருப்போம். அந்தப் போராளிகளும் நாங்களும் மிகுந்த பாசமாகத்தான் இருந்தோம். அப்படியிருந்த எங்களை இன்று சின்னாபின்னமாக்கியது இந்த பிரதேசவாதம் என்ற ஏழெழுத்து.

வன்னி முன் காவலரணில் இராணுவத்தின் கையைத்தொடும் அளவு அருகில் நின்று போராடிய நெஞ்சுரம் உடைய போராளிகள் இன்று தன்னுடன் இருந்தவனிடத்தில் உயிரைப் பலிகொடுக்கும் துர்ப்பாக்கியநிலை நேர்ந்துள்ளது. கைகோர்த்து நின்ற போராளிகளை இன்று எதிரிகளாக்கியது இந்த பாழாய்ப்போன பிரதேசவாதம். ஜெயசிக்குறு சமரில் அன்று ஒரு வங்கருக்குள் இருந்த இருவரும் இன்று நேரில் சந்திக்க பயப்படுகின்றனர். 15வருடம் தமிழீழத்துக்காக போராடிய போராளி தனது இலட்சியம் அர்த்தமற்றுப் போனதால் கடந்தகாலத்தை வீணாக்கிவிட்ட கவலையுடன் வெறும் முள்ளுபாட்டாவுடன் மட்டும் வீடுவந்து பொதுமகனாகியுள்ளான். அங்கவீனமாகியதால் அரைமாவீரன் என்று அழைக்கப்படு பவன் வீடுவந்து சேரவும் இயலாததால் எங்கு என்று தடம் தெரியாமல் போய்விட்டான்.

போராளிகள் தனது தலைவரின் மீது விசுவாசமாக இருப்பது இயற்கைமட்டுமன்று இன்றியமையாததும் கூட. ஆனால் கண்களால் பார்த்த உருவமே மனதில் நிற்கும். தனது தலைவரை காணாத போராளிகள் தன்னிடம் கட்டளையிடும் ஒருவரையே தனது எசமானாகக் கொள்வார். கிழக்குப் போராளி களைப் பொறுத்தவரை கருணாவே தங்களது எசமானனும், ஆசானும் ஆவார். அவரின் கட்டளைகளை சிரமேல் ஏந்தி நடக்கும் கடப்பாடுடையவர்கள். போராளிகள் இரு தலைவருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பாட்டால் போராளிகள் யார் பக்கம் இருப்பார்கள் என்பது எவருக்குமே தெரியும். இது தெரிந்த எமது தேசியத் தலைவர் கருணா அம்மானை இந்நிலையில் விலக்கும்போது ஏற்படும் விளைவுகளை அறியாதிருந்தது புதுமை யானதே.

பல கஷ்டத்தின் மத்தியில் பெற்றெடுத்த பிள்ளையை பாலூட்டி சீராட்டி வளர்த்த தாயில்லையென்றால் தந்தையில்லை, தந்தையில்லை யென்றால் தாயில்லை என்ற உணர்வை அவர்களே ஊட்டிவிட்டு திடீரென தாய்வேண்டுமா தந்தை வேண்டுமா என்று கேட்டால் பிள்ளை என்ன செய்வான். மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் மூச்சுத் திணறும்போது அவன் மூச்சைப் பறிப்பதா? வடக்கிலிருக்கும் போராளிகளின் நிலைமை வேறு. அவர்கள் எப்போதும் எந்த நிலையிலும் தலைவரிடம் தான் செல்வார்கள். தங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பார்கள். ஆனால் கிழக்கு போராளிகளின் நிலைமை அப்படியல்ல. வடக்குக்குச் சென்றால் தலைவரின் கீழும் கிழக்குக்கு வந்தால் கருணா அம்மானின் கீழும்தான் செயற்படுவார்கள். அதனால் அவர்கள் இரண்டுபேரையும் எப்பவுமே சமமாகவே மதிப்பார்கள். இந்த நிலையில் வேறுபாடு என்றால் யார் பக்கம் செல்வது என்று விடை தெரியாமல் தத்தளிக்கும் போராளிகள் துரோகிகளா? அது பிரதேச வாதமா? அன்று தலைவரின் கட்டளையை கருணாவின் வழிநடத்தலில் ஏற்று வன்னிக்காட்டில் சண்டை பிடித்து காயமடைந்து மீண்டவன் இன்று கருணா, தலைவர் போரில் வெருகல்காட்டில் பிணமாகக் கிடக்கிறான். மனச் சாட்சியுள்ள ஒவ்வொருவரும் உங்கள் மனதைத் தொட்டுச் சொல்லுங்கள் யார் மனதில் பிரதேச வாதம் இல்லை. உங்களுக்கே உண்மை தெரியும். பிரதேச வாதம் பற்றி சிங்கள மக்கள் எங்களிடம் பேசும்போது அவர்களுக்கு நாங்கள் என்ன பதில் கூற முடியும். இனவாதம், மொழிவாதம் போன்றதே இந்த பிரதேச வாதமுமாகும். இது இல்லாமல் இருந்திருந்தால் தமிழீழம் என்ற சொல்லும் இல்லை. தேசிய தலைவரும் இல்லை.

நாங்கள் எல்லோரும் இலங்கையர்கள். அதுபோல் தமிழீழத்துக் காக இரத்தம் சிந்திய வீர, வீராங்கனைகள். வன்னியில் இருந்து போராடி காயமடைந்தவன் இன்று அதாவது இந்த 49 நாள் சண்டையில் கொல்லப்பட்டு குப்பைமேட்டில் கிடக்கிறான். நானாவது என் தாய்தந்தையுடன் வந்து சேர்ந்தது ஒரு நன்மை. இந்த குப்பைமேட்டில் பிணமாகிக் கிடப்பவனின் நிலையென்ன? அவன் தமிழீழத்திற்காக சிந்திய இரத்தத்திற்கு முடிவென்ன? அன்று மிகவும் சக்திவாய்ந்த இயக்கம் நானிருந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம். இன்று 5000 போராளிகளை இழந்த பலமிழந்த இயக்கமென்று பிறநாட்டவரும் உறவினரும் கூறுவதைக் கேட்க இதயம் துடிக்கிறது. ஏன் இவ்வளவு நாளும் என்னைத் தமிழீழ போராட்டத்தில் இணைத்து என் எதிர் காலத்தை வீணாக்கினேன் என்று எண்ணத் தோன்றுகின்றது.

இப்படிக்கு
பூமகள், மட்டக்களப்பு

**குறிப்பு:** சகோதரி பூமகள், இனவாதம், மொழிவாதம் போலத்தான் பிரதேசவாதமும் என்று தனது கட்டுரையில் கூறியிருக்கின்றார். உண்மைதான். இனவாதம், மொழிவாதம், பிரதேசவாதம் என்பன ஒரு இனத்தின் அல்லது மொழியின் அல்லது பிரதேசத்தின் அடிப்படையில் ஒரு குழு இன்னொரு குழுவினை அடக்கு முறைக்குள்ளாக்குவதாகும். இனம், மொழி அல்லது பிரதேசம் என்பதன் அடிப்படையில் பேதங்கள் பாராட்டி ஒரு மக்கள் குழுவின் நிலத்தை அபகரித்து ஆக்கிரமித்து, அவர்கள் மொழி மற்றும் கலாசார பாரம்பரியங்களை நிராகரித்து, அவர்களின் அரசியல் பிரதிநிதித்துவங்களை மறுத்து, அவர்களின் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்களை இல்லாதொழித்து, அவர்கள் உயிர் வாழ்வதற்குரிய பாதுகாப்பை வழங்காமல் செய்வதையே இனவாதம் அல்லது பிரதேசவாதம் என்போம். இவ்வகையான அடக்குமுறை சார்ந்த உறவு வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் இல்லையென்பதனால் அங்கு பிரதேசவாதம் என்பதற்கான அடிப்படையே கிடையாது என்பது தலைவியின் வாதம். கிழக்கு மக்களின் வளங்களோ, ஜீவனோபாயங்களோ வடக்கு மக்களினால் அபகரிக்கப்பட வில்லையல்லவா? அதே போல் அவர்கள் பாதுகாப்பும் வடக்கைச் சேர்ந்த மக்களினால் அச்சுறுத்தலுக் குள்ளாக்கப்படவில்லை யல்லவா?

ஒருவருடைய பேச்சுவழக்கினைப் பரிகாசம் செய்து அவரைத் தாழ்மைப் படுத்துவது, அது ஒரு இரக்கமற்ற செயலாக இருந்தாலும் கூட, அதைப் பிரதேசவாதம் என்று கூற முடியாது. இது மக்கள் குழுக்களிடையே எங்கேயும் பொதுவாகக் காணப்படும் நிலையாகும். உதாரணமாக, நகரத்தைச் சேர்ந்தவர்கள் கிராமத்தாரை மதிக்காமல் அவர்களை ஏளனம்

படிப்பகம்

www.padippakam.com



செய்வதை நாம் சாதாரணமாகப் பார்க்கலாம். எங்கள் பிரதேசங்களின் எந்த மாவட்டத்தை எடுத்துக் கொண்டாலும் அங்குள்ள கிராமப்புற மக்களுக்கு தங்கள் தங்கள் மாவட்டங்களிலுள்ள யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை போன்ற நகர்ப்புறங்களில் வாழும் மக்கள் தம்மை ஒரு பொருட்டாக மதிப்பதேயில்லை என்கின்ற குறை இருந்து கொண்டேயிருக்கின்றது. தாம் ஒதுக்கப்படுகின்றனர் என்று உணர்ந்திருக்கின்றனர். இதே போலத்தான் படித்தவர்கள் படிக்காதவர்களை ஏளனம் செய்வதும் ஆங்கிலம் தெரிந்தவர்கள் ஆங்கிலம் தெரியாதவர்களைப் பரிகாசம் செய்வதும். இது பார்க்கப்போனால் உலக வழக்காகும். இவ்வகையான வேற்றுமைகளும் அவற்றிற்கேயுரித்தான பகிடிகளும் சிறுமைப்படுத்தற்தனங்களும் தனக்குள் கொண்டிராத நாடே இந்த உலகில் கிடையாது. இந்தச் சின்ன முரண்பாடுகளின் அடிப்படையில் நாம் பிரிந்து கொண்டே சென்றோமென்றால் அதற்கு முடிவே கிடையாது. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லையல்லவா? இந்த வர்க்க, சமூக வேறுபாடுகளை பிரதேசவாதம் என நாம் வரைவிலக்கணம் கொடுப்பது தவறாகும்.

அத்துடன், வெளியேறிய போராளிகள் மிக எண்ணிக்கை. கருணா, தலைவர் போரா அல்லது தமிழ் தேசியத்திற்கு எதிரானவர்களை முறியடிப்பதற்கான போரா? போன்றவற்றையும் தெளிவாக்கி கொள்ள வேண்டும்.

எது எப்படியிருப்பினும், பூமகளின் கடிதம், நாம் ஒவ்வொருவரும் சக மனிதர்களை, அவர்கள் யாராயிருப்பினும், அவர்களை மனிதராக எல்லோருக்கும் சமமாக மதிக்கின்ற பண்பைப் பேணவேண்டும் என்கின்ற உண்மையை உணர்த்திமிருக்கின்றது. எங்கள் கண்களைத் திறந்திருக்கின்றது. இது மிகப் பெறுமதி வாய்ந்த பாடமாகும். இயக்கத்துக்கு உள்ளும் வெளியேயும் உள்ள சகோதரிகள் இதனை கருத்தில் கொள்ள வேண்டுகின்றோம். சகோதரி பூமகள் எங்கள் தாயகத்துக்கான உன்னதமான போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்தியவர். அவர் இவ்வாறு மனம் நொந்து போயிருத்தல் எங்களுக்கு மிக மனவேதனையைத் தருகின்றது. சமூகத்துக்காக வாழ்ந்து போராடிய அவர் தனது எதிர்காலத்தை வீணாக்கியதாக நாங்கள் ஒருபோதும் கருத மாட்டோம். எங்களெல்லோருக்கும் முன்மாதிரியாக விளங்கும் அவரை நினைத்துப் பெருமையடைகின்றோம். (ஆர்)

# வாக்களித்தவர்களுக்கு நன்றிகள்

# பெண் பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கு வாழ்த்து

கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண, மட்டக்களப்பு மாவட்டங்களில் இருந்து தலா போட்டியிட்ட ஒரே பெண் வேட்பாளர்கள் இருவரும் பாராளுமன்றம் செல்கின்றனர் இவர்களை வேட்பாளர்களாகத் நிறுத்தியமைக்கு தமிழரசுக் கட்சிக்கும், அவர்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகின்றன. புதிய பெண் பாராளுமன்ற அங்கத்தவர்கள், பத்மினி சிதம்பரநாதன், தங்கேஸ்வரி கதிர்காமர் ஆகியோரை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தங்கள் மக்களுக்கு அரிய சேவைகள் பல ஆற்ற வேண்டுமென்றும் கோரி வாழ்த்துத் தெரிவிக்கின்றோம்.

அத்துடன், கிழக்கில் தற்போது வெடித்து தமிழ் தேசியத்தையே கேள்விக் குறியாக்கிய பிரதேசவாதப் பிரச்சனையை இல்லாதொழிக்கக் கூடிய பொருத்தமான பதவிகளில் இவர்களிருவரும் அமர்ந்திருக்கின்றனர். வடக்கையும் கிழக்கையும் சேர்ந்த இவர்கள் இருவரும் இணைந்து அதற்கான நடவடிக்கைகளில் இறங்க வேண்டியது அவசியம் என்றும் கருதுகிறோம்.

ஏற்கனவே இரு பெண்கள் இதுவரை வட-கிழக்கில் பாராளுமன்றம் சென்றிருக்கின்றனர். இராஜமனோரி புலேந்திரன், ரங்கநாயகி பத்மநாதன் என்ற இருவரும் முறையே தமது கணவன், சகோதரன் ஆகியோர் மரணமடைய அவர்களின் பாராளுமன்ற இருக்கைகளை ஏற்றுக் கொண்டவர்கள். இருவரும் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவம் செய்தவர்கள். பத்மினியும் தங்கேஸ்வரியுமே தமிழ்க் கட்சிகளிலிருந்து தெரிவான முதல் பெண் பாராளுமன்றப் பிரதிநிதிகளாவார்கள்.

வட-கிழக்கில் 2001ம் ஆண்டு தொடக்கம் அரசியலில் பெண்கள் சம பிரதிநிதித்துவம் பெறவேண்டுமென்ற கோரிக்கையுடன் பல பெண்கள் குழுக்கள் தமது நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்திருக்கின்றன. இவை, அதனைத் தமது பிரதானமான வேலைத்திட்டமாகக் கொண்டு 2002ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் "**இணைந்த கரங்கள்**" என்ற வலையமைப்பினை உருவாக்கின என்பது யாவரும் அறிந்ததே. **"அடுப்படியிலிருந்து அரசியல் வரை 50:50"** என்ற பிரச்சார நடவடிக்கையை இணைந்த கரங்கள் அமைப்பின் ஓரங்கமாகிய "விழுது" அமைப்பு கடந்த வருட இறுதியில் முன்னெடுத்தது. இம்முறை பெண்கள் எமது பிரதேசத்தில் முதன்முறையாக தமிழ்க் கட்சிகளின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டதில் இணைந்த கரங்களின் செயற்பாடும் கணிசமான பங்களித்தது என்பதை மறுக்க முடியாது. இதே போல் வரப்போகின்ற உள்ளூராட்சி மன்றங்களிலும் பெண்கள் சம பங்கு வகிக்க வேண்டும் என்கின்ற கோரிக்கையினை முன்வைத்து அதற்கான முதன்மை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

சபாஸ்கரன், களுபோவிலை

குறிப்பு: 2002ம் ஆண்டு இணைந்த கரங்கள் உருவாகுவதற்கான தயாரிப்பு நடவடிக்கைகளில் இணைந்து கொள்ள அன்று இந்த வலையமைப்புடன் தொடர்பிலிருந்த அரங்கச் செயற்பாட்டுக் குழுவையும் குறிப்பாக அதன் அங்கத்தவர் பத்மினி சிதம்பரநாதனையும் கோரினோம். அவர் அக்கறைப்படவில்லை. 2002 ஒக்டோபர் மாதம் இணைந்த கரங்களின் மாநாட்டுக்கும் அவர் வரவில்லை. பின்பு 2003 பெப்ரவரி மாதம் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்கள் பிரதிநிதித்துவம் கோரி இணைந்த கரங்கள் வலையமைப்பு முன்னெடுத்த பிரச்சார நடவடிக்கையில் யாழ் மாவட்ட நடவடிக்கைகளில் பங்கு கொள்வாரா என்று நாம் கேட்டபோது அதையும் அவர் ஏற்றுப் பங்களிக்கவில்லை. இன்று தன்னை "ஒரே பெண் வேட்பாளர்" என்று அடையாளம் காட்டித் தேர்தலில் நின்று பாராளுமன்றம் சென்று இருக்கிறார். நல்ல விடயம். ஆனால் அவர் இனியாவது ஏராளமான பெண்கள் அரசியலில் பங்குபற்ற ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவார் என்று நம்புகின்றோம். (ஆர்)

படிப்பகம்

www.padippakam.com



# மட்டக்களப்பு மக்களின் மனநிலையையும் புரிந்துகொள்ளுங்கள்

தலைவி பத்திரிகையின் ஆசிரியர் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பாக எங்களுடைய சில விளக்கங்களையும் அவருக்கு தெளிவுபடுத்த விரும்புகின்றோம். தலைவியின் பார்வையில் என்னும் பகுதியில் சில ஒருதலைப்பட்சமான கருத்துக்கள் காணப் படுகின்றது. மட்டக்களப்பு மாவட்ட மக்கள் அந்த வேளையில் தமது கண்டனத்தை தெரிவிக்காததாலும், இதற்குரிய ஆர்ப்பாட்டத்தில் அள்ளுப்பட வேண்டியிருந்ததாலும் பொதுமக் களும் இப்பாதகத்துக்கு பங்காளிகள் என இவ் ஆசிரியர் உட்பட பலர் எண்ணியிருக்கலாம். ஆனால் நாங்கள் இதை எதிர்த்திருந் தால் பிரதேசவாதத்தை எழுப்பியவர்களினால் அன்றே கொலை செய்யப்பட்டிருப்போம்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக வடகிழக்குப் பகுதியில் பொருளாதாரத் தடைச் சட்டத்தின்படி அன்றாட தேவைக்குரிய ஏராளமான பொருட்களை கைப்பற்றப்படாத பிரதேசங்களுக்கு வழங்குவதை தடைசெய்யப்பட்டிருந்தது. மட்டக்களப்பு மாவட்டத்திலும் கைப்பற்றப்படாத பிரதேசம் இருந்தது. கைப்பற்றப்படாத இப் பிரதேசத்திலேயே பெரும்பாலான மக்களின் ஜீவனோபாய தொழில்செய்யும் மூலவளங்கள் இருந்தது, மட்டக்களப்பு மாவட்டத்தின் சனத்தொகையின் 55 வீதமான மக்கள் இப் பகுதிகளிலேயே வாழ்கின்றனர். யுத்த காலப்பகுதியில் ஆட்சிசெய்த அரசாங்கம் வடகிழக்கு தமிழ் மக்களுக்கு எதிராக ஒரே அநீதியைத்தான் இழைத்தார்களே தவிர வடக்குக்கு வேறு கிழக்குக்கு வேறாக கைக்கொள்ளவில்லை. இதை வைத்துக் கொண்டு பிரதேச வாதத்தை தொடர்புபடுத்துவது முட்டாள் தனமான செயல்பாடே ஆகும். ஏனென்றால் மட்டக்களப்பு மக்களோ, யாழ்ப்பாண மக்களோ வடகிழக்கு அபிவிருத்தித் திட்டத்தை தடைப்பண்ணவில்லை. இருபகுதி மக்களும் அரசாங்கத்தின் துன்பந்தரும் திட்டங்களை அனுபவித்தார்களே தவிர செயற் படுத்தியவர்களல்ல.

அரசாங்கத்தின் அடக்குமுறையின்கீழ் மட்டுமல்ல, மட்டக் களப்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டபோதே மட்டக் களப்பு மக்கள் சுதந்திர மில்லாது அதிகமான கட்டுப்பாடுகளுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டு அடக்குமுறைக்குட்பட்டு வாழ்ந்தவர்கள். இவ்வாறாக வாழ்வதற்கு மட்டக்களப்பு விடுதலைப் புலிகளினால் இடப்பட்ட கட்டமைப்பே காரணமாக இருந்தது. இவ்வேளையில் பலாத்காரமான ஆட்சேர்ப்பு, வருமானத்திலும் அதிகளவான வரிகள், சுதந்திரமாக கல்விகற்பதற்கான வாய்ப்பில் லாமை, மட்டக்களப்பில் அபிவிருத்தி செய்வதற்கு முன்வந்த நிறுவனங்களை தடை பண்ணியமை, புதிய தொழிலுக்கு முதலீடு செய்ய முடியாமை, வெளிமாவட்டத்திலிருந்து வரும் திறமை வாய்ந்தர்களை ஏற்றுக்கொள்ளாத சூழ்நிலைகள் ஆகிய எத்தனையோவிதமான இன்னல்களை அனுபவிக்கும்போது இவை தொடர்பாக தெரிந்தும் தெரியாதவர்கள்போல் நடக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் வாழ்ந்தோம். ஏனென்றால் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுடைய அபிலாசைகளை நிறைவேற்றும் பணிகளில் ஈடுபடுபவர்கள் என்ற ஒரே காரணம் தான். இருந்தும்கூட மட்டக்களப்பு மக்களை அடக்கு முறைக்கு உட்படுத்து கின்றார்கள் என்று நாங்கள் எத்தனையோ அறிக்கைகளை இயக்க தலைமைகளுக்கு அனுப்பி யிருந்தோம். இதற்கு ஒரு நடவடிக்கையுமே எடுக்கவில்லை. இப்படி இவர்களாலேயே எடுக்கமுடியாத நேரத்தில் மட்டக்களப்பில் வாழும் சாதாரணமக்களால் எவ்வாறு இதை தட்டிக்கேட்க முடியும்?

பிரதேசவாதத்தை உருவாக்கியவர்கள் பெரும் தலைமை யினால் வளர்த்தெடுக்கப்பட்ட தனிநபர் ஒருவராவர். இதற்கு துணைநின்ற ஓரிரு கல்விமான்களும், தங்களுக்கான சுய வருவாயை அதிகரித்துக்கொள்ளும் குறுகிய மனப்பான்மை யுள்ள சக்கட்டைகள் சிலரும் எல்லாமாக ஒரு 15பேருக்கும் உட்பட்டவர்கள்தான் பிரதேசவாதத்தை உருவாக்கி தமிழ் மக்களின் அபிலாசைகளை சுக்குநூறாக சிதறடிக்க முனைந்தவர் கள். அவர்கள் இப்போது படிப்படியாக வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருக்கின்றார்கள். மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பிரதேச வாதத்துடன் சிறிதும் தொடர்பற்றவர்கள் என்பதையும், இதற்கு எதிர்ப்பானவர்கள் என்பதையும் மட்டக்களப்பு மாவட்டத் தை விட்டு பிரதேசவாதத்தை உருவாக்கியவர்கள் தாமாகவே வெளியேறியது தெளிவு படுத்துகிறது.

இன்று எனது அனுபவத்தின்படி எத்தனையோ வறிய கிராம தாய்மாருடன் பேசியிருக்கின்றேன். அவர்கள் தலைவரை நம்பித்தான் எங்களுடைய பிள்ளைகளை இயக்கத்துக்கு விட்டோம். பிரதேசவாதம் கதைப்பவர்களை நம்பியல்ல என்று கூறினார்கள். இன்று இப்பிரச்சினையை ஏற்படுத்தியதால் மட்டக்களப்பு மக்கள் உடனடியாக தங்களுடைய பிள்ளைகளை இயக்கத்திலிருந்து பிரித்து எடுப்பதற்கு தங்களது உயிருக்கும் அஞ்சாது பிரதேச வாதிகளின் காவலரண்களை உடைத் தெறிந்து அவர்களுடன் சண்டையிட்டார்கள். தங்களின் பிள்ளைகளை அர்ப்பணித்திருந்த தாய்மார் இப்பிரதேச வாதத்தின் கொடுமைகளை சொல்லி கதறிக்கதறி அழுதார்கள். மட்டக் களப்பில் வாழ்ந்த யாழ்ப்பாண மக்களை வெளியேறுமாறு உத்தரவிட்டபோது மட்டக்களப்பு மக்கள் கண்ணீர் வடித்தார்கள். பிரதேச வாதத்தை அம்பலப்படுத்திய மார்ச் 4ம் திகதி தொடக்கம் மட்டக்களப்பு மக்களின் மனங்களில் இடிவிழுந்துபோன ஒரு சோகமாகவே இருந்தது. தற்போது கிழக்கு மக்களாகிய நாங்கள் தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போய்விட்டது என்று சந்தோசப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். இப் பிரச்சினை இலங்கைத் தமிழருக்கு ஒரு பெரிய பாடம் புகட்டியுள்ளது. இனிமேல் நம்மீது எந்த நடவடிக்கைகளையும் திணிக்க எவரையும் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. உரிமையுடன் கூடிய நீதியான கட்டமைப்புக் குள் எங்களை தலைவர் வழி நடத்துவார் என்னும் அமோக நம்பிக்கையுடன் இன்று மட்டக்களப்பு மக்கள் வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம்.

நாங்கள் மட்டக்களப்பில் இருக்கும் போதே எங்களுக்கு முன்னாலேயே சர்வாதிகாரப்போக்குடன் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை மட்டக்களப்பு மாவட்டத்தை விட்டு வெளியேறு மாறு உத்தரவிட்டபோது இதைத் தடுக்க ஒரு வழியும் கிடைக்காமல் தவித்தோம். இதற்காக மட்டக்களப்பு மாவட்டத் தை விட்டு வெளியேற்றப்பட்டவர்களிடமும், யாழ்மாவட்ட மக்களிடம் நாங்கள் மன்னிப்பு கோருகின்றோம்.

ய. சந்திரா, கோறளைப்பற்று பெண்கள் அமைப்பு

படிப்பகம்

www.padippakam.com



## [illegible] உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளனவா?

ஆசியாக்கண்டத்தில் சிறந்த நாகரிகமும் கல்வி வளர்ச்சியும் கொண்ட நாடு இலங்கையாகும். உலகிலேயே முதலாவது பெண் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்கா என்றாலும பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளனவா? என்ற கேள்வி எழுகிறது. ஒரு பெண் குழந்தையாகப் பிறந்தால் அவள் வளரும்வரை தகப்பனுக்குக் கட்டுப்பட்டவள் என்றும். திருமணம் ஆன பின் தன் கணவனுக்குக் கட்டுப்பட்டவள் என்றும். கணவன் மரித்த பின் மகனுக்குக் கட்டுப்பட்டவள் என்ற நிர்ப்பந்தம் இன்றும் உண்டு. இதுவும் ஒரு ஆணாதிக்கமே.

விதவைகள் உயிருடன் கொழுத்தப்படுவதும் அநாகரிக செயலும் ஆணாதிக்க அடக்குமுறையுமாகும். ஒரு காலத்தில் இந்தியாவில் இந்த அடிமைத்தனம் நிலவி வந்தது. ஒரு முறை தஞ்சாவூர் மகாராஜா இறந்த போது அவருடைய இரண்டு மனைவிகளும் உயிருடன் கொழுத்தப்பட்டனர். இந்த அடக்கு முறையை ஆட்சி செய்ய வந்த ஆங்கிலேயரும், கிறிஸ்தவ மிசனரிகளும், சட்ட விரோதமாகக் கருதி அவற்றை தடுத்து நிறுத்தி விட்டனர். இந்த வகையில் ஆங்கில கல்வி வளர்ச்சியும், பண்பாடும் இலங்கை, இந்தியத் தேசங்களில் பெண் விடுதலைக்கு வழிவகுத்தது எனலாம். ஆங்கிலேயரின் வருகையால் பெண்களுக்கு விடிவு கிடைத்தது. பெண்கள் கல்வி கற்கக் கூடியதாக யாழ்ப்பாணத்தில் உடுவில் மகளீர் கல்லூரியை உருவாக்கினார்கள். அக்கல்லூரி ஆசியாவில் பெண்களுக்கென உருவாக்கப்பட்ட முதல் கல்லூரியாகும்.

### ஆண் பெண் சம உரிமை

இறைவனின் படைப்பில் பெண் குறைந்தவள் அல்ல பெண் அடிமையும் அல்ல கற்பென்று சொன்னால் ஆண் பெண் இருவருக்கும் தான். ஆக்காலத்தில் ஆணுக்குரிய உரிமைகள் அணைத் தும் பெண்ணுக்கும் உண்டு என்றார். பெண்கள் கலை, இலக்கியம், பண்பாடு, விஞ்ஞானம், விவசாயம், விளையாட்டு, மருத்துவம், கணனித்துறை, விண்வெளி ஆய்வுகள் அணைத்திலும் பெண்கள் சளைத்தவர்கள்அல்ல வன்னியில் A9 வீதி புனரமைப்பு வேலையில் ஈடுபடும் ஆண்களை விட பெண்களே அதிகமாக ஈடுபடுகின்றனர். அவர்களே அதிகமாக கூலியும் பெறுகின்றனர்.

### சீதனக்கொடுமை

இலங்கை சமூகங்கள் அனைத்தும் தந்தைவாதக் கட்டமைப்புக் குள் இயங்கி வருகின்றான. ஆகையால் அவர்கள் சீதனக்கொடுமையினால் துன்புறுகின்றனர். சீதனத்தை ஒழிக்க எந்தவெரு மதமும் குரல் கொடுக்கவில்லை மாறாக மதங்கள் சம்பிரதாயங்களிலும் மரபுகளிலும் கட்டுண்டு கிடக்கின்றன. இக்கொடுமையால் பெண்வீட்டார் துன்பப்பட ஆண்வீட்டார் முதலாளித்துவத் தன்மையைப்பெற்ற சமுகமாக மமதை கொள்கிறனர். பெண்கள் இருவகையில் ஒடுக்கப்படுகிறார்கள்.

அவை :

1. மத அடிப்படைவாதம் 2. ஆணாதிக்கம்

### சமூக அநீதி

குறிப்பாக மது பாவனை, கசிப்பு உற்பத்தி ஆகிய தீய பாவனைகளால் ஆண்கள் அதற்கு அடிமையாகும் போது பெண்களும் பிள்ளைகளும் பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றனர். உழைப்பின் பெரும் பகுதியை மதுபாவனைக்குப் பயன்படுத்துவதால். பெண்களின் இல்லச்சுமை அதிகரிக்கின்றது. பெண்கள் தங்களுடைய உணவைப் பெற முடியாது வறுமை நிலைக்குத்தள்ளப்படுகின்றனர். இதனால் பெண்களும் பிள்ளைகளும் போசாக்கு இன்மையால் வலுவற்ற சமூகமாக மாறுகின்றது.

### யுத்தமும் பெண்களும்.

தமிழ் சிங்கள இனவேறுபாட்டால் எழுந்த யுத்தத்தால் பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் பெண்களே. இவர்களின் தாய்மார் பெரும் வறுமையில் வாழ்கின்றனர். வடக்கு கிழக்கு மாகாணத்தில் இன்று அநேகப் பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர். இவர்களின் உரிமைகள் யாரால் பாதுகாக்கப்படப் போகின்றன? அரசசார்பற்ற நிறுவனங்களே கரிசனை காட்டுகின்றன. அரசு தன் பொறுப்புக்களை விட்டு பின் வாங்கியுள்ளது. இலங்கையின் ஜனாதிபதி ஓர் பெண்ணாவார், மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவியும் ஒரு பெண்ணாவார். (திருமதி ராதிகா குமாரசாமி) அடிப்படையிலிருந்தும் பெண்கள் மேல் நடைபெறும் அடாவடித்தனங்களையும், அடக்கு முறைகளையும், குறித்து எந்த வித ஆர்ப்பாட்டங்களோ, பிரச்சாரங்களோ, நீதிவிசாரனைகளோ, ஆணைக்குழுவின் செயற்பாடுளோ, இல்லாமல் இருப்பது பெரும் மனவருத்தத்துக்குரிய விடயமாகும் பெண்கள் அடக்கி ஒடுக்கப்படுவதும் அவர்களின் உரிமைகள் இம்மண்ணில் நிலைநிறுத்தப்பட அரசியல், சமூக, பொருளாதார விழிப்புணர்வு மிக மிக அவசியம். ஆணின்றி பெண்ணில்லை, பெண்ணின்றி ஆணில்லை இவ்வகையில் உரிமைகள் ஆணுக்கும் பெண்ணுக்கும் சரி நிகர் சமமாக பகிரப்படவேண்டும்.

வண. ஜே. தேவஅருட்செல்வம், பிரதான வீதி, கிரான்,
மட்டக்களப்பு.

## அபிவிருத்திப் பணிக்கு உயிரிழப்பு ஏன்?

சென்ற வாரம் தமிழரசுக் கட்சிகள் கொழும்பில் இணைந்து நடாத்திய கூட்டத்தில் திரு டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அமைச்சராக நியமிக்கப்பட்டது குறித்து இவர் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டவர், இவருக்கு அமைச்சர் பதவி கொடுத்ததையிட்டு கண்டனம் தெரிவித்தமை சரியா? இதைக் கூறுவதால் நான் டக்ளஸ் தேவானந்தாவின் ஆதரவாளருமில்லை. அவர்களின் கட்சிக்கு வாக்களித்தவருமில்லை. இவருக்கு யாழ்மாவட்டத்தில் 14ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்களின் வாக்குக்களைப் பெற்றுத்தான் அமைச்சரானார். இவருக்கு வாக்களித்த 14ஆயிரம் தமிழ் மக்களும் தமிழர்களில்லையா? அல்லது இத் தமிழர்கள் தமிழர்களாக தமிழரசுக் கட்சிக்கு தெரியவில்லையா? டக்ளஸ் தேவானந்தா மாதிரி ஒரு அரசியல்வாதி மட்டக்களப்பில் இருந்திருந்தால் இப்பகுதி விடுதலைப்புலிகள் உடன் கொலைசெய்திருப்பார்கள். யாழ் மாவட்டத்தில் இருந்ததனால் அவர் மக்களுக்கு அதிகமான அபிவிருத்தித்திட்டங்களைச் செய்வதால் அவர் இன்னும் உயிருடன் இருக்கிறார் என்று பல ஆங்கிலப் பத்திரிகைகளில் செய்தி வெளியானது. இன்று டக்ளஸ் தேவானந்தா யுத்தத்தைக் கைவிட்டு குறிப்பிட்ட ஆதரவாளர்களுடன் அரசியல் கட்சியுடன் இணைந்து அபிவிருத்தியைத்தான் மேற்கொள்கின்றார். மட்டக்களப்பிலுள்ள அனேகமான புலி உறுப்பினர்கள் கருணாவின் பிரச்சினைக்கு முன் அபிவிருத்தியை பற்றித்தான் கதைப்பார்கள். இவர்களுக்கு அநேக வேறு வேலைகள் இருப்பதால் இவர்கள் அபிவிருத்தியை பொதுமக்களிடம் கையளிக்க வேண்டும். இவர்கள் அபிவிருத்தியை செய்யவேண்டியதில்லை. அபிவிருத்தியை தடைசெய்யாமல் இருந்தாலே போதுமானது.

படிப்பகம்

www.padippakam.com



இன்னுமொரு விடயத்தையும் நினைவுபடுத்தலாம் மட்டக்களப்பில் தெரிவான நிமலன் சவுந்தரநாயகம் எந்தவிதமான குற்றங்களையும் செய்தவரல்ல. ஒரு வற்புறுத்தலும், ஊழலும் இல்லாத தேர்தலில் ஒவ்வொரு தனிமனிதனும் சுயவிருப்புடன் சுதந்திரமாக இட்ட வாக்குகளினால் வெற்றிபெற்ற ஒருவர்தான் அவர். உயிரோடு இருந்திருந்தால் இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் எத்தனையோ அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வறிய மக்கள் மத்தியில் ஒரு திருப்பமே உருவாகியிருக்கும். அவர் கொலைசெய்யப்பட முன்பு விடுதலைப் புலிகளால் கொலைசெய்யப்பட்ட ஒருவரின் மரணவீட்டுக்கு பொதுமக்கள் போவதற்கு பயப்படுவார்கள். ஆனால் நிமலன் சவுந்தரநாயகத்துக்கு 60,000 மக்கள் கிராமம் கிராமமா வீதிவீதியா ஊர்வலம் சென்று கண்ணீர் வடித்தார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள எந்த அரசியல்வாதி இறந்நாலும் இவருக்கு கண்ணீர்வடித்த தொகையினரின் கால்பங்கினர் கூட அஞ்சலி செலுத்தமாட்டார்கள். மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, திறமை வாய்ந்த தலைமைத்துவங்களை அழிப்பது ஏன்? இது இன்னும் தொடருமா? நான் எனது அனுபவத்தின் படி ஒரு விடயத்தைக் கூற விரும்புகின்றேன். இந்த 21 வருட காலப்பகுதியில் இழக்கப்பட்ட மனித உயிர்களுக்கு எல்லோருமே பதில் கூறவேண்டியவர்களாக உள்ளோம். இது எங்களுடைய மனதில் பதிந்தவை.

இப்படிக்கு
மந்திரா, மட்டக்களப்பு

**குறிப்பு:** உங்கள் வாதம் சரி. திறமையான தலைமைத்துவங்களை ஆதரித்து வளர்க்க வேண்டும்தான். ஆனால், மக்களின் வாக்குகளைப் பெற்ற எல்லா அரசியல்வாதிகளும் வறிய மக்களின் அபிவிருத்திக்காகச் செயற்படுவர் என்ற உங்கள் அனுமானம் சந்தேகத்திற்கிடமானது. வாக்குகளை கவர்ந்திழுப் பதற்காகவே பணம் காசு தானம் பண்ணும் நடவடிக்கையில் இறங்கி விடுகிறார்கள். இப்படி அவர்கள் இறங்கிவிட்டால் அது இன்னும் மோசமான நடவடிக்கையாகும். திறமையான தலைமைத்துவங்களை வளர்த்தெடுப்பதில் மட்டுமல்ல, **விவேகமான மக்கள் சமூகங்களையும் உருவாக்கும் பணி** நம்மெல்லோருக்கும் உண்டு. (ஆர்)

# கோறளைப்பற்று பெண்கள் அமைப்பின் வேலைத்திட்டத்தில் ஒரு திருப்புமுனை

கோறளைப்பற்று பெண்கள் அமைப்பின் இவ்வருட பெண்கள் வேலைத்திட்டம் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் மந்தமடைந்துபோன விடயம் தொடர்பாக ஒரு ஆய்வுக் கலந்துரையாடல் தடாக வளாகத்தில் 2004-04-07 அன்று நடைபெற்றது. இதனூடாக வெளிப்பட்ட விடயமானது,

1. பெண்கள் அபிவிருத்தி அல்லது பெண்ணியம் தொடர்பாக வேலை செய்வதற்கு முதலில் சமூகத்தில் நடுத்தரப் பெண்களுடனும் உயர்தரப் பெண்களுடனுமே இணைந்து தொடங்க வேண்டும்.
2. அடிமட்ட கிராம வறிய பெண்களுடன் இணைந்ததால் இவர்களுக்கு பெண்கள் அபிவிருத்தி பெண்ணியம் என்பவை விளங்கி கொள்ள முடியாத நிலை.
3. ஆரம்பத்தில் இவ் வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பவர்களுடைய திறனும், தேர்ச்சியும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போக வேண்டியுள்ளது. அது எங்களிடம் இல்லை.

நிறுவனம் ஒரு குறிப்பிட்ட வேலையைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதால் இதற்கு அப்பால் நகர்த்தி யோசிக்க இடம் கொடுக்காத நிலைப்பாடே இருக்கின்றது. எனவே சரியான அணுகுமுறையும், செயற்பாடும் கொண்டு நடத்துவதற்காக கோறளைப்பற்று பெண்கள் அமைப்பு நான்கு படித்த பெண் தொண்டர்களிடமே இவ்வேலையைப் பொறுப்பளித்துள்ளது.

இவர்களின் பெயர், விலாசம், வேலை செய்யும் இடம் என்பன வருமாறு: செயலாளராக சாமித்தம்பி சுதந்திராதேவியும், சுங்கான்கேணி, கிண்ணையடி ஆகிய இடங்களுக்கு அழகையா சுமதி, பிள்ளையார்கோயில் வீதி, சுங்கான்கேணி, வாழைச்சேனை என்பவரும், கொண்டையன்கேணி, கனகேஸ்வரன் கௌசல்யா, இல. 33, கொண்டையன்கேணி, வாழைச்சேனை என்பவரும், சந்திவெளி, பாலையடித்தோணா, பாக்கியராஜா சுதர்சினி, பாலிப்போடியா வீதி, சந்திவெளி, முறக்கொட்டான்சேனை என்பவரும் பொறுப்பளிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆறு கிராமங்களில் மாத்திரமே நின்று வேலையை ஆரம்பிக்க சிறுசிறு இலக்கு நோக்கங்களை தெளிவாக தொகுத்து அளித்துள்ளார்கள். இவ் நோக்கங்கள் வருமாறு

1. பெண்கள் வேலைத்திட்டத்திற்கு பொருத்தப்பாடானவர்களை இனம் கண்டு தகவல் தரவு சேகரித்தல்.
2. பெண்கள் வேலைத்திட்டத்திற்குரிய இலக்கு குழுக்களை உருவாக்குதல்.

இச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வழி காட்டும் திறனுள்ள பெண்களின் உதவிகள் பெறப்படும். அதாவது

- அரச திணைக்களங்களில் பணிபுரியும் பெண்கள்.
- சமூக முன்னோடியான பெண்கள்.
- கிராம மாதர் சங்கம்.

பெண்கள் வேலைத்திட்டத்திற்குரிய இலக்குக்குழுகளாகிய

- பாதிக்கப்பட்ட பெண்கள் குறிப்பாக (வெளிநாடு சென்று வந்தவர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள்).
- கணவனை இழந்த பெண்கள். (யுத்தத்தால் வேறு இயற்கை அனர்த்தங்களாளல்) இழந்தவர்கள்

இதன் அடிப்படையிலேதான் குழு உருவாக்கமும் செய்து அவர்களுடன் தான் இந்த வேலை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பான ஒருநாள் பட்டறை ஒன்று 2004-03-25 சந்திரா தலைமையில் இடம்பெற்றது. சித்திரை மாதத்திற்காக மேற்குறிக்கப்பட்ட கிராமங்களில் வேலை செய்வதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ் நோக்கத்திற்கு ஏற்றபடி வேலை செய்து அதற்குரிய அறிக்கை தயாரிப்பு முறையும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. நோக்கம் அதற்கான காரணங்கள் நடவடிக்கை அதன் விளைவு, மூலோபாயம் என்ற அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பெண்கள் குழுக்களை அமைத்து அவர்களின் தேவைகளுக்கும் பிரச்சினைகளையும் எல்லோரும் உணர்ந்து ஒரு மாற்று தீர்வு காண வேண்டியதன் அவசியத்தை நன்கு உணர்த்திடும் என்பதில் ஐயமல்லை.

அ. சுமதி, பிள்ளையார்கோயில் வீதி, சுங்கான்கேணி.

படிப்பகம்

www.padippakam.com



# முடிவுகள் – படிவங்களில் இருந்து

## தலைவி – மீளாய்வு

ஜனவரி மாதம் தலைவியினூடாக அதை மீளாய்வு செய்ய உதவும் படிவங்களை சகல மாவட்டங்களுக்கும் அனுப்பி வைத்தோம். தலைவியின் ஒரு வருடப் பூர்த்தியின்போது அதன் பயன் பற்றி சகோதரிகள் மத்தியில் ஒரு கருத்துக் கணிப்பு எடுப்பதே இதன் நோக்கமாக இருந்தது. அதன்படி படிவங்களும் இலகுவில் மடித்து முத்திரை ஒட்டி தபாலில் சேர்க்கக்கூடிய முறையில் வடிவமைக்கப் பட்டிருந்தது. அனுப்பப்பட்ட ஒவ்வொரு 5 தலைவி செய்தி மடல்களுக்கு ஒரு மீளாய்வுப் பத்திரம் என 500 படிவங்கள் அனுப்பியதில் 29 படிவங்கள் நிரப்பப்பட்டு எமது கரம் கிடைத்தது. கிடைத்துள்ள படிவங்களின்படி சகோதரிகளின் தலைவி பற்றிய மதிப்பீட்டினைக் கீழே தருகின்றோம்.

1. மீளாய்வு செய்தவர்களின் நிலை:
   - கிராமச் சங்க அங்கத்தவர்கள் – 15 பேர்.
   - தனிநபர்கள் – 03 பேர்
   - ஏதும் அரசசாரா நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் – 11 பேர்
   - இதில் திட்டச் செயற்பாடு ஆரம்பிக்காதவர்கள் – 11 பேர்
   - திட்டச் செயற்பாட்டில் ஈடுபடுவோர் – 18 பேர், அவையாவன,
   - கடனுதவி – 06 பேர்
   - சிரமதானம் – 03 பேர்
   - பெண்கள் விழிப்புணர்வு – 09 பேர்
   - சுயதொழில் முயற்சி – 05 பேர்

2. தலைவி செய்தி மடலைப் பகிர்ந்து கொள்ளும் முறைகள்:-
   - சனசமூக நிலையம் – 03 பேர்
   - தங்களுடைய வீட்டு அங்கத்தவர்களுடன் – 05 பேர்
   - தங்களுடைய அலுவலக அங்கத்தவர்களுடன் – 04 பேர்
   - பாதிப்புக்குள்ளான பெண்களுடன். – 05 பேர்

3. தலைவி செய்தி மடலில் மிகப்பிடித்த அம்சங்கள்:-

   செய்திச்சிதறல், தலைவியின் பார்வையில், அரசியலும் சமூகத் தொண்டும், பெண்களை அரசியலில் பங்கு பெறச்செய்வதற் கான ஆலோசனைகள், முஸ்லிம் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள், பெண்கள் மீதான வன்முறை பற்றிய உலகவலம்.

4. செய்தி மடலில் பிரசுரிக்கப்பட்ட விடயங்களை உபயோகிக் கும் நடவடிக்கைகள்:
   - கருத்தரங்குகள்
   - பெண்களின் திறமையை வெளிக்கொண்டுவருதல்
   - குடும்பத்தில் அடக்கு முறையினை வாதாடி வெல்லுதல்
   - பெண்களின் உரிமை பற்றி தெரிந்து கொள்ளுதல்
   - தன்னம்பிக்கையை வளர்த்தல்
   - பிரச்சினையை எல்லோருடனும் பகிர்ந்துகொள்ளும் ஊடகமாக ஆக்கல்
   - பெண்களும் தனியாக வாழலாம் என்ற நம்பிக்கையைப் பெறுவதற்குக் கருவியாக எடுத்தல்.

5. இன்னும் மாற்ற அல்லது முன்னேற்ற வேண்டிய விடயங்கள்:
   - நிறப்படங்களைப் போட்டு கவர்ச்சியானதாக மாற்ற வேண்டும்.
   - கிராமத்து பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளையும் அவற்றுக்கான தீர்களையும் முன்வைக்க வேண்டும்..
   - இன ஐக்கியத்துக்கான பக்கச்சார்பற்ற யதார்த்தத்தை உணர்த்தக்கூடிய கட்டுரைகளை இன்னும் பிரசுரிக்க வேண்டும்.
   - சமாதான முன்னெடுப்புக்கு சமூக சேவையாளர்களின் பங்களிப்பு என்ன என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

(ஒரு சிலர் சமையற்கலை, கைவேலை போன்ற அம்சங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று எழுதிருந்தார்கள். அது இச்செய்தி மடலின் நோக்கம் இல்லாததனால் நாம் அதை சேர்த்துகொள்ளவில்லை.)

### எமது கருத்துக்கள்:

சகோதரிகள் முன்வைத்த கோரிக்கைகளைப் பரிசீலித்தோம். நான்கு நிறங்களில் படங்களைப் போடுவதானால் ஒவ்வொரு மடலினதும் செலவு பன்மடங்காக உயரும். இப்பொழுது இந்த மடலை இலவசமாகவே, அதன் அச்சுச், தபால் செலவுகள் எல்லாமே நாமே ஏற்றுத்தான் உங்களுக்கு அனுப்புகின்றோம். ஒவ்வொரு மடலினதும் செலவு உயர்ந்தால் நாம் தலைவியை ஒரு இதழ் ரூ 10.00க்கு விற்க வேண்டி நேரிடும். உங்கள் சிபாரிசுகளை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். தலைவி மடலுக்கு சந்தா விதிப்பது உகந்த முறையா?

அடுத்து, கிராமப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளையும் அவற்றுக்கான தீர்வுகளையும் முன்வைத்தல் நல்லதொரு கருத்து. நாங்கள் அதற்கேயுரிய பிரச்சனைகள் பக்கத்தை ஆரம்பிக்கலாம். அப்பக்கத்தில் கிராமத்தைச் சேர்ந்த சகோதரிகள் எமக்கு எழுதி அனுப்பும் பிரச்சனைகளுக்கு தீர்வுகளை வழங்குவோம். உங்கள் பிரச்சனைகள் அடங்கிய கோரிக்கைகள் கண்டு நாம் அப்பக்கத்தை ஆரம்பிப்போம்.

அதே போல் இன ஐக்கியத்திற்கான கட்டுரைகளை நாம் கூடிய அளவு பிரசுரிப்போம். ஆனால் பக்கச் சார்பற்று அக்கட்டுரைகள் இருக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது என்பது எங்கள் தாழ்மையான அபிப்பிராயம். ஒவ்வொருவரும் தங்கள் கண்ணோட்டத்தி லிருந்துதான் விடயங்களை எழுதுவார்கள். உதாரணமாக, எங்கள் நாட்டில் சிங்களவர்கள்தாம் கூடியளவு ஒற்றுமையைப் பற்றிப் பேசுவார்கள். ஒன்றாக எல்லோரும் "இலங்கையர்களாக (ஸ்ரீலங்கா வினராக)" பேதம் பாராட்டாமல் இருந்தால் என்ன என்பார்கள். உண்மை என்னவென்றால் ஸ்ரீலங்கா என்றால் பௌத்த சிங்களம் என்று, அதன் அடையாளம் மாறிப் போய்விட்டது. ஆகவே அவர்கள் ஸ்ரீலங்காவினராக இருங்கள் என்றால் அதற்குக் கருத்து சிங்களவரின் ஆளுமைக்குக் கீழ் இருங்கள் என்றுதான் தமிழ் மக்கள் அதை விளங்கிக் கொள்வார்கள். இதனால், நாம் வழமை போல எல்லாத் தரப்பு வாதங்களையும் முன்வைப்போம். ஒவ்வொன்றினதும் நியாயங்களையும் வெளிச்சம் போட்டுக் காட்டுவோம். அந்த விவாதங்களில் வெளிவருவதே மக்களின் அபிப்பிராயங்களாகும்.

யாரோ சொல்லுவதை அப்படியே முழுங்கிக் கொண்டு ஒப்புவிக்காமல் மக்கள் தங்கள் சொந்த அபிப்பிராயங்களை உருவாக்குவதன் மூலமேயே துடிப்பான சிவில் சமூகத்தை நாம் உருவாக்கலாம்.

சமாதான முன்னெடுப்புக்கு பெண்கள் எவ்வாறு பங்களிக்கலாம் என்று நாம் முன்னமேயே எழுதிமிருந்தோம். சமூக சேவையாளர்கள் பங்களிப்பதைப் பற்றி ஏதும் சந்தேகங்களைக் கேட்டீர்களானால் நாம் அதற்கு விளக்கம் அளிக்கத் தயாராக இருக்கின்றோம். முடிவாக, மீளாய்வுப் பத்திரங்களை நிரப்பி அனுப்பிய பெண்களுக்கெல்லாம் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். உங்கள் ஆலோசனைகளினால்தான் நாமும் பெண்களுக்குப் பயன் படக்கூடிய முறையில் இச்செய்தி மடலை வெளிக்கொணரலாம்.

படிப்பகம்

www.padippakam.com



# உலகெங்கும் சர்வதேசப் பெண்கள் தினம் கொண்டாடப்பட்ட முறைகள்

நாம் முன்பு பெண்கள் மீதான வன்முறைகள் பற்றிய உலகவலம் புரிந்தது சகோதரிகளுக்கு நினைவிருக்கலாம். இந்த இதழில் நாம் இன்னொரு உலகவலம் புரியப்போகின்றோம். உலகின் பல நாடுகளில் அங்குள்ள பெண்கள் அமைப்புக்கள் எவ்வாறு தாங்கள் சர்வதேசப் பெண்கள் தினத்தை அனுஷ்டித்தனர் என்பதைத் தருகின்றோம். கடந்த மார்ச் மாதம் சர்வதேசப் பெண்கள் தினத்தைக் கொண்டாடிய சகல பெண்கள் குழுக்களுக்கும் அமைப்புக்களுக்கும் இந்தத் தகவல் சுவாரசியமாக இருக்கலாம் என்று நம்புகின்றோம்.

2004ம் வருடம் உலகளாவிய ரீதியாக, "எச் ஐ வி எய்ட்ஸ் உம் பெண்களும்" என்கின்ற கருப்பொருள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றது. அதையொட்டியே பெண்கள் அமைப்புக்களுடைய நிகழ்ச்சிகளும் இருப்பதை நாம் அவதானிக்கலாம்.

அவுஸ்திரேலியா – ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அங்கத்துவ நிறுவனமான UNIFEM தனது குழுக்கள் மூலமாக அவுஸ்திரேலியா நகரங்கள்தோறும் நிதி திரட்டும் விருந்துகள் ஏற்பாடு செய்தது. இந்நிதிகள், தென் பசுபிக் தீவுகளில் "தலைமைத்துவத்தில் பெண்கள்" என்கின்ற திட்டத்தினைச் செயற்படுத்த UNIFEM அமைப்புக்கு உதவும். சமாதானத்தையும் பாதுகாப்பையும் பெண்கள் உறுதிப்படுத்துவதை ஊக்குவிப்பதே அங்கு இத் திட்டத்தின் செயற்பாடுகளாக இருக்கின்றன. மெல்போர்ன் நகரில் அங்குள்ள பொது நூலகத்திலிருந்து அரசு பாராளுமன்றம் வரை யுத்தத்தை எதிர்க்கும் பெண்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடந்தது.

கனடா – டொறன்டோ நகரில், ஈரானியப் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சர்வதேச இயக்கம் என்னும் அமைப்பு "கனடாவின் ஷரியா நீதிமன்றங்களும் பெண்கள் உரிமைகளும்" என்கின்ற தலைப்பில் ஒரு மாநாட்டினை நடத்தியது. இது இஸ்லாமிய ஷரியா சட்டம் பெண்கள் மீதும் சிறுவர்கள் மீதும் ஏற்படுத்தும் தாக்கத்தினை ஆராய்ந்தது. இதைப் பற்றிய மேலதிகத் தகவல் வேண்டுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் முகவரி homawpi@rogers.com.

வுட்பிரிட்ஜ் நகரில் "பால்நிலையும் எச் ஐ வி எய்ட்ஸ் உம்" என்ற தலைப்பில் திரைப்பட விழாவொன்றினை Female Eye Film Festival என்ற அமைப்பு ஒழுங்கு படுத்தியது.

பிஜித் தீவுகள் – சமாதானத்துக்காகவும் எய்ட்ஸ் இல்லாத சமூகத்துக்காகவும் பெண்கள் ஒன்றிணையும் வாரம் பிஜித் தீவுகளில் பிரகடனப்படுத்தப்பட்டது. இது தலைநகரான சுவாவின் குடிகள் மையத்தில் முடிவடைந்த ஒரு பெரிய ஊர்வலத்துடனே ஆரம்பமானது. அந்த வாரம் முழுவதும் பெண்கள் அமைப்புக்கள் சகல இடங்களிலும் பல பொதுக்கூட்டங்களை நடத்தினர். வியாபார ஸ்தலங்களையும், பாடசாலைகளையும், சமூக நிறுவனங்களையும் சில குறிப்பிட்ட நிறங்களைத் தத்தமது நிறுவகங்களில் தொங்கவிடவும் கோரிக்கை விடுத்தனர் – பெண்களுக்காக ஊதா, சமாதானத்திற்காக வெள்ளை, எய்ட்ஸ் நோய்க்காக சிவப்பு. இத்துடன் "பசிபிக் பெண்கள்" என்கின்ற நூலும் வெளியிடப்பட்டது. இது 1950கள் தொடங்கி 1980கள் வரை பெண்கள் உரிமைகளுக்காகப் போராடிய பசுபிக் பெண்களைப் பற்றி அவர்களின் நண்பர்கள் எழுதிய சரிதங்களைத் தாங்கி வெளிவந்திருக்கின்றது.

சொலமன் தீவுகள் – பெண்களுக்கான தேசிய சபை "எய்ட்ஸ் நோயை ஒழிக்கும் வேலைத்திட்டம், ஜனநாயகத்தை வளர்த்தல், பெண்களின் பங்களிப்பை அதிகரித்தல்" என்கின்ற பொருளில் பல கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தது. இவை "எச் ஐ வி எய்ட்ஸ்க்கு முகம் கொடுத்தல்", "சொலமன் தீவுகளில் ஜனநாயகத்தை முன்னெடுக்க பெண்கள் வகிக்கக்கூடிய பங்கு", "தேர்தல்கள் 2006", "கல்வியும் எழுத்தறிவும்" போன்ற தலைப்புக்களில் நடத்தப்பட்டன.

தென் ஆபிரிக்கா – AMARC என்னும் ஆபிரிக்காவின் பெண்களும் பால்நிலையும் என்கின்ற திட்டம் இரண்டு மணி நேர இணையவலை ஒலிபரப்பினை "பெண்களும் எய்ட்ஸ்உம்" என்கின்ற பொருளில் ஏற்பாடு செய்தது. இது இளம் யுவதிகளின் பால் நடத்தையில் எய்ட்ஸின் தாக்கம், தாய்க்கும் குழந்தைக்கும் இடையில் எய்ட்ஸ் பரவல், எய்ட்ஸ் நோயாளிகளுக்கான சுயதொழில் திட்டங்கள் என்பன போன்ற விடயங்களை கையாண்டது.

ஆப்பிரிக்க பத்திரிகையாசிரியர் சபை ஊடக நிறுவனங்களில் பால்நிலை செய்தி அறிவித்தலில் தொடர்பான கொள்கை எவ்வளவு அனுஷ்டிக்கப்படுகின்றது என்பதை மார்ச் மாதம் 8ந் திகதி கண்காணித்தது. அது மட்டுமன்றி, அந்த நாட்டில் உள்ள சகல பத்திரிகைகளும் தங்கள் கடைசிப் பக்கத்தினை மார்ச் 5 முதல் 8 வரை தென்னாபிரிக்க பால்நிலையும் ஊடகமும் வலையமைப்பிற்கு விட்டுத் தரவேண்டும் என்றும் கோரப்பட்டது. இந்த வலையமைப்பே அந்த மூன்று நாட்களும் கடைசிப் பக்கத்திற்கான ஆக்கங்களை உருவாக்கினார்கள்.

இங்கிலாந்து – ஈராக்கில் பெண்கள் விடுதலை என்னும் அமைப்பு ஈராக்கிய பெண்களுக்காகவும் , அங்கு நியமிக்கப்பட்ட ஆட்சிக்குழு சர்வதேசப் பெண்கள் தினத்தை மார்ச் 8 இலிருந்து ஆகஸ்ட் 18க்கு மாற்றுவதை எதிர்க்குமுகமாகவும் லண்டனில் ஆர்ப்பாட்ட ஊாவலத்தை ஏற்பாடு செய்தது. தொடர்புகளுக்கு, houzan73@yahoo.co.uk; www.equalityiniraq.com

அமெரிக்கா – நியூயோர்க்கில் யுத்தத்தை எதிர்க்கும் பெண்கள் ஆர்ப்பாட்டம் WICEJ இனால் ஏற்பாடு செய்யப்பட்டது. வாஷிங்டனில் பெண்கள் சூழல் அபிவிருத்தி நிறுவனம் "தங்கள் சமூகத்துக்கும் நாட்டுக்கும் உலகத்துக்கும் பெண்கள் கோருவது என்ன?" என்ற தலைப்பில் வார இறுதி (சனி ஞாயிறு) பட்டறைகளும், ஊர்வலங்களும், கற்பித்தல் நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டன.

www.padippakam.com



# மாதர் போராட்டத்தில் முஸ்லிம் மங்கையரின் பங்களிப்பு

தலைவியே இன்று பெண்களின் உரிமைக்குரலாகவும். தனித்துவம் காக்கும் தனிப் பிறவியாகவும் உனைக்காண்கின்றேன். ஏனெனின் மாதம் ஒரு முறை உன் வருகைக்காக வழி பார்ப்பேன். என்னமோ தெரியவில்லை, உன்னை பார்த்து ரசித்த பின்னர். என் அடி மனம் சுழிக்கும் காரணத்தை அறிய நானே முதலில் சிரமப்பட்டேன் . பின்னர் அடிமனமே அறியப்படுத்தியது. ஆம் இன்று பெண்கள் சமூகமாக விழித்தெழுந்து தங்களை சூழ்ந்திருக்கும் வன்முறைகளையும், ஒதுக்கப்பட்டிருக்கும் சமவுரிமைகளையும், சமூகத்தின் ஒவ்வொரு மூலையாக தேடி ஒருங்கிணைந்து குரல் கொடுத்து வருகின்றனர். ஆனால் ஏன் இஸ்லாமிய பெண்கள் இவ்வாறான சமவுரிமைகளை கேட்பதில் தயக்கம் காட்டுகிறார்கள்? பெண்கள் தினம், விவாத அரங்கு, உரிமைகோரும் போராட்டங்கள், என பலவாறான பெண்கள் ஒன்றுகூடுகையில் இஸ்லாமிய பெண்களின் பங்கு மிக அரிதாக உள்ளது. ஏனைய சகோதர அங்கத்தவர்கள் இஸ்லாமிய பெண்களுக்கு இப்படிப் பங்குபற்றும் உரிமையை அளிக்கவில்லையா? பெண்களை அடக்கியாளும் மார்க்கமாக இஸ்லாம் இருக்குமா எனத்தோன்றுகிறது.

நாங்கள் ஏன் கேட்க வேண்டும்? எங்களுக்கு கேட்க வேண்டிய தேவை இல்லை. எங்களுக்குத தேவையானவை யெல்லாம் அன்று இஸ்லாம் வழங்கி விட்டது. உண்மைதான். ஆனால் இன்று உண்மையிலேயே உங்களுக்கு இந்தச் சமுதாயம் தருகிறதா? தராவிட்டால் தட்டிக்கேட்கவேண்டியது நியாயமல்லவா? 1400 ஆண்டுகளுக்கு முன் பெண்களின் முக்கிய பங்கைக் கொண்டு அவர்கள் பெரிதும் மதிக்கப்பட்ட காலம். ஆசிரியர்களாக, பண்டிதைகளாக, மற்றும் மருத்துவ தாதிகளாக, யுத்த வீராங்கனைகளாக, அரசியல் ஆலோசகர்களாக, நியாயவாதிகளாக, என ஆற்றிய பங்களிப்புகள் மகத்தானவை. அவர்களின் பெயர்கள் இன்றுவரை மதிக்கப்படுகின்றன. அவர்கள் மனைவியாகவும், தாயாகவும் தான் இருந்தார்கள் . அவர்களைப் பற்றிப் பெருமையாகப் பேசப்படுவதெல்லாம் அவர்கள் சமூகத்துக்கு ஆற்றிய தொண்டுகளைத்தான்.

இன்று சமூகநலனுக்காகப் பாடுபடும் முஸ்லிம் பெண்களுக்கு வழங்கப்பட வேண்டிய முறையான அங்கிகாரமும்இ உற்சாகமும் எங்கே? இன்று முஸ்லிம் சமூகத்தின் அபிவிருத்தி குறியீடுகளை வைத்துப் பார்க்கையில் பெண்கள் பின் தங்கிய நிலையில் காணப்படுவதேன்? எந்த மார்க்கம் பெண்களின் உரிமைகளை நிலை நிறுத்தி அவள் நசுக்கப்படுவதிலிருந்து பாதுகாத்ததோ அதே மார்க்கத்தின் பெயரால் அவள் பின் தங்கிய நிலைக்கு ஆளாக்கப்படக்கூடாது. எனவே ஆண் பெண் என்ற சம நிலையை மீண்டும் தோற்றுவிப்பதற்கான போராட்டம் வேண்டும். முஸ்லிம் பெண்களின் உரிமையையும் அந்தஸ்தையும் மீளப்பெறுவது முழு முஸ்லிம் சமூகத்தினதும் நன்மைக்கே யாகும் எனவே நீதியான உலக ஒழுங்கை நோக்கி எல்ல சமுதாய பெண்களைப்போல முஸ்லிம் பெண்களும் உயிர்த் துடிப்பான பங்களிப்பையும் ஆதரவையும் வெளிக்கொண்டுவர வேண்டும் என தெளிவாக வெளிப்படுத்துகிறேன்.

S.I பாறுக், ஓட்டமாவடி -03

## செய்திச் சிதறல்கள்

### பெண்கள் பங்குகொண்ட அரங்கப் பயிற்சி

- விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் ஒழுங்கு செய்த தெருவெளி அரங்கப் பட்டறை ஏப்ரல் 28, 29, 30 திகதிகளில் வவுனியாவில் வதிவிடப் பயிற்சியாக நடைபெற்றது. இதில் கிராம அபிவிருத்தி மன்றம், மனித மேம்பாட்டு நிலையம், சமூக அபிவிருத்தி மன்றம் (யாழ்ப்பாணம்), போரூட் ஆகிய அமைப்புக்களைச் சேர்ந்த 27 பேர் பங்கு கொண்டனர். தெருவெளி நாடகத்தின் கதை உருவாக்கம், நடிப்பு முறை, அபிவிருத்தியில் தெருவெளி நாடகத்தி முக்கியத்துவம் போன்ற விடயங்கள் இப்பட்டறையில் எடுத்தாளப்பட்டன. பயிற்சியின் போது ஒரு நாடகமும் தயாரிக்கப்பட்டு அது சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் 30ந் திகதி ஆற்றுகை செய்யப்பட்டது. இதன் வளப்பகிர்வாளர்களாக யாழ்ப்பாணம் செயல்திறன் அரங்க இயக்கத்தினர் செயற்பட்டனர். இது தொடர் பயிற்சியாக நடைபெறும்.

### தெருவெளி அரங்க பயிற்சி விண்ணப்பம்

- பெண்களுக்கான தெருவெளி அரங்கப் பயிற்சி ஒன்று யூன் மாதம் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. தெருவெளி அரங்கை தமது திட்டச் செயற்பாடுகளில் உபயோகிக்கும் அல்லது உபயோகிக்க நினைக்கும் பெண்கள் அமைப்பைச் சார்ந்தவர்களும், ஆர்வமுள்ள தனி நபர்களும் இதில் கலந்து கொள்ளலாம். விண்ணப்பங்கள்:

அனுப்ப வேண்டியது

பயிற்சி இணைப்பாளர்
விழுது, ஆற்றல் மேம்பாட்டு மையம்
69 கோயில் வீதி, குருமன்காடு, வவுனியா.

www.padippakam.com



# ஈராக் – ஒரு வருடத்தின் பின்

ஜனாதிபதி சதாம் ஹுசைன் பிரம்மாண்ட அழிவுகளை ஏற்படுத்தும் ஆயதங்களை பதுக்கி வைத்திருக்கிறார் என்று பொய்ப் பிரச்சாரங்களை மேற்கொண்டு அமெரிக்காவும் பிரிட்டனும் ஒரு வருடத்திற்கு முன்னால் ஈராக் மீது படையெடுத்தன. பாவம், ஏற்கனவே பத்தாண்டு பொருளாதாரத் தடையினால் நலிந்து போயிருந்த நாடு ஈராக். தாங்குமா? அருந்ததி ராய் என்னும் உலகப் புகழ் பெற்ற இந்திய எழுத்தாளர் ஈராக் யுத்தத்தைப் பற்றி எழுதியது போல் "ஒருவனின் முழங்காலை உடைத்துவிட்டு வா ஓட்டப் பந்தயத்துக்கு என ஒரு பயில்வான் அழைத்த மாதிரி.." கெக்கரித்துக் கொண்டு உள்ளே நுழைந்தார்கள். பழம் பெருமை பொருந்திய அந்த நாட்டின் விலை மதிக்க முடியாத தொல்பொருட்களையெல்லாம் களவெடுத்து நாசம் பண்ணினார்கள். இனி ஈராக்கின் எண்ணெய் வளத்துக்கு தாமே அதிபதி என்று மீசையை முறுக்கினார்கள். ஈராக் மக்கள் புகட்டினார்கள் பாடம்.

இன்று அமெரிக்கா வெற்றி வாகை சூடி சரியாக ஒரு வருடத்திற்குப் பின்னர், சுமார் 730 அமெரிக்கப் படைவீரர்கள் இறந்து விட்டனர், நாள்தோறும் ஒன்று இரண்டு என இறந்த வண்ணமேயிருக்கின்றனர். ஏப்ரல் மாதம் மட்டுமே 134 வீரர்கள் வழிமறித்தாக்குதலிலும் கண்ணிவெடித் தாக்குதலிலும் இறந்தார்கள். இது ஈராக் யுத்தத்தின்போது இறந்த அமெரிக்கப் படைவீரர்களிலும் மூன்று மடங்காகும். இடிபாடடைந்த நகரத்தைக் கட்டித் தரவும் எண்ணெய் வளங்களை விற்கவும் வந்த வெளிநாட்டு கொந்தராத்துக்காரர்கள் குரூரமான முறையில் மக்களால் கொல்லப் பட்டார்கள். ஃபலூஜா என்கின்ற நகரம் கிளர்ச்சியாளர்கள் கையில் வீழ்ந்தது. விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற கணக்கில் "கடினமாகத்தான் இருக்கின்றது ஆனால் பயங்கரவாதத்தை ஒழிப்போம்" என்று வெற்றுச் சூள் உரைத்துக் கொண்டிருக்கின்றனர் புஷ்ஷும் பிளேயரும்.

விடயம் இதுதான். ஈராக்கில் சுன்னி முஸ்லிம்கள் சிறுபான்மையினத்தோர், சதாம் ஈட்சியிலிருக்கும்வரை அவர்கள் கைதான் ஓங்கியிருந்தது. ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருந்தும் அடக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கிடையிலிருந்த பிளவுகளை உபயோகித்து ஈராக்கில் தனது கைப்பொம்மை ஆட்சியினைக் கொண்டு வரலாம் என்று கனவு கண்டது அமெரிக்கா. அதற்காக சஷியா பிரிவினரைச் சேர்ந்த சில மதகுருமாரை விலைக்கும் வாங்கியது.


ஆனால் நடந்தது என்ன? சதாமின் ஆதரவாளர்களான சுன்னி முஸ்லிம்கள் அமெரிக்கர்களுக்கெதிரான கெரில்லா போராட்டத்தை ஆரம்பிக்க சதாம் எதிர்ப்பாளர்களும்கூட அமெரிக்கர்களை வெளியேறக் கோரினார்கள். இன்று சஷியா பிரிவினரின் மதத் தலைவரான முக்தாடா அல் சாதர் என்பவர் புனித நகரமாகிய நஜர்பில் இருக்க அந்நகரைச் சுற்றி 2,500 அமெரிக்கப் படைகள் முற்றுகையிட்டிருக்கின்றன. சுன்னி முஸ்லிம்களின் நகரமாகிய ஃபலூஜா சதாமின் முன்னாள் தளபதியாகிய ஜஸீம் மொஹமட் சாலேயின் கட்டுப்பாட்டிற்குள் சுமார் ஆயிரம் படைவீரர்களினால் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அங்கு "அமெரிக்கர்கள் மீதான வெற்றி!" என்ற கோசஷத்துடன் சதாம் காலத்து ஈராக்கிய கொடிகள் எங்கும் பறக்க விடப்பட்டிருக்கின்றனவாம்.

இஸ்லாம் செய்ய முடியாத சாதனையை அமெரிக்கா செய்யப் போகின்றது. அதாவது, ஈராக்கில் ஒன்று சேர்க்க முடியாத சுன்னி முஸ்லிம்களையும் ஷியா முஸ்லிம்களையும் ஒன்று சேர்த்தாலும் சேர்த்து விடும். முன் வைத்த காலைப் பின்னெடுக்க முடியாமல் தத்தளிக்கின்றது அமெரிக்கா. ஈராக்தான் 21ம் நூற்றாண்டின் வியட்நாமோ. இனியாவது ஆயுத பலத்தின் மூலம் மக்களை அடக்க முடியாதென்று வரலாற்றிலிருந்து கற்றுக் கொள்வார்களா ஆட்சியாளர்கள்?

**உங்கள் கடிதங்கள்.....**



## *"நான் அனுப்புவது கடிதம் அல்ல... என் உள்ளம்"*



உங்கள் தலைவிக்காக நான் வரைவது இது வெறும் வார்த்தையல்ல அவற்றால் வரையவும் முடியாது. பெண் தன்னிலை அடைய அவள் தன்னை உணர்ந்து கொள்ள நிறைய திட்டங்கள் அமுலாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால் பெண் தன்னை உணர்ந்தாலும் அவள் உய்வதற்கான வழிதான் தெரியவில்லை, அப்படித்தான் தெரிந்தாலும் மற்றவர்கள் அதனை அடைத்து விடுகிறார்கள். இந்நிலையில் நீங்கள் கேட்கும் ஐம்பதுக்கு ஐம்பது எப்படி சாத்தியம்?

ஒரு பெண் தன்னை உணர்ந்து அவள் செயற்பட ஆரம்பித்தால் அவளைத் தட்டிக் கொடுப்பார் யாரும் இல்லை ஆனால் தூற்றுவார் அனேகர். அவளது நடை உடை பற்றியும் அவள் கூறும் ஒவ்வொரு வார்த்தைகள பற்றியும் அவள் மற்றவர்களை அணுகும் முறை பற்றியும் விமர்சிப்பவர்கள் ஏராளம்.

ஆண்கள் பேச்சுக்களில் சிலரிடம் பெண்களின் முன்னேற்றம் பற்றிய கருத்துக்கள் இருந்தாலும் மனதளவில் ஒருவருக்குமே அந்த எண்ணப்பாடு இல்லை என்றே நான் கூறுவேன். அப்படி ஒரு ஆண் எண்ணியதன் பிரகாரம் அப்பெண் செயற்பட்டால் அந்த ஆணைப்பற்றி குறை கூறுவர் அனேகர். இது உலக நீதியா?, சமூகநீதியா?, ஆண் நீதியா?.

ப. சுரபி, மோகனப்பிரியா.

குறிப்பு: ஆயாசம் கொள்ளாதீர்கள் சகோதரிகளே. மாற்றங்களை யாரும் வரவேற்றது கிடையாது. மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் உங்களுக்கு சரியெனப் பட்டதைத் துணிந்து செய்யுங்கள். உலகம் முதலில் தூற்றினாலும் பின்பு உங்கள் பின்னால் வரும். (ஆர்)

### அன்பான எனது சகோதரி தலைவிக்கு

நான் தலைவி செய்தி மடலை பூஞ்சோலை நிறுவனத்தினூடாக ஒக்டோபர் –ஜனவரி வரை பார்த்து வருகிறேன். எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. ஆனால் எங்கள் கிராமங்களில் உள்ளவர்கள் அனேகமானோர் படிப்பறிவு குறைந்தவர்கள் இங்குள்ள பெண்களும் விளங்கிக்கொள்ளும் வகையில் பெண்களுக்கு

படிப்பகம்

www.padippakam.com



நடக்கும் பிரச்சனைகளையும், பெண்களின் அபிவிருத்தியையும், பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சனையையும் படங்கள் மூலம் பிரசுரித்தால் இன்னும் நன்றாக இருக்கும்.

எனவே தலைவியைப்பார்க்கும் ஒவ்வொரு பெண்ணும் நான் நாட்டிற்கு என்ன செய்துள்ளேன். என்ன செய்யப்போகிறேன்? பெண்களின் பிரச்சனைக்கு எத்தனை பேருக்கு தெளிவு படுத்தியுள்ளேன்? யாருக்குத்தெளிவு படுத்தப்போகிறேன்? என சிந்திக்க முடியும் செயல்பட முடியும் எனவே இதைக்கருத்தில் கொண்டு பிரச்சனை சார்ந்த படங்களை பிரசுரிக்க வேண்டும் என மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
தலைவியின் வாசகி,
எஸ்.சினேகா

**குறிப்பு:** வாசகி சினேகா கூறும் ஆலோசனை மிகவும் பயனுள்ள ஆலோசனை யாகும். தலைவி செய்திமடலை நாம் ஆரம்பிக்கும் போதும் கார்ட்டுன் படங்களை அறிமுகப்படுத்தலாமா என்றும் யோசித்தோம். ஆனால் இம்மடல் யாருக்காக எத்தகைய பெண்களுக்காகப் பிரசுரிக்கப்படுகின்றது என்பதைக் கவனத்தில் கொண்டபோது அத்திட்டம் கைவிடப்பட்டது. உண்மை யாதெனில், வித்தியாசமான படிநிலைகளில் இருக்கும் பெண்கள் எல்லோருக்கும் ஒரு சிறிய செய்தி மடலினைக் கொண்டு வருவது சாத்தியமற்றதாகும். ஒருவருக்கு ஏற்றது மற்றவருக்கு அலுப்புத் தருவதாக இருக்கும். நாங்கள் எங்கள் வளங்களுக்கு உட்பட்டதாக இதற்கு என்ன செய்யலாம் என்று ஆராய்ந்து பார்க்கின்றோம். எப்படிச் செய்யலாம் என்கின்ற உங்கள் சிபாரிசுகளை யும் வரைந்து அனுப்பினீர்களாயின் எங்களுக்கு இலகுவாக இருக்கும். (ஆர்)

## புரட்சித்தலைவியே!...

உன்னை நான் இம்மாதம் 10ம் திகதியே முதன்முதல் கண்டடைந்தேன். களிப்புற்றேன் தலைவியே என் கரம் கிட்டிய அன்றே இதயம் கவர்ந்தாய். நான் உன் அபிமானியானேன். கடவுளின் அரும் பெரும் கொடையான இவ்வுலக மனித வாழ்வில் பெண்வர்க்கத்தின் எதிர் பார்ப்புக்கள், அபிலாசைகள், ஏக்கங்கள் போன்றவற்றை அழகாய் படம் பிடித்து அடிமைத்தனத் தை உடைத்தெறிந்து தலைநிமிர்ந்து சம அந்தஸ்தோடு வாழ வளம் சேர்க்கும் உத்தமி நீ! உன் கருத்துக்கள் ஒவ்வொன் றும் உத்தமமானவை ஆண்களுக்குச்சமனாக குடும்பத் தேவையை நிறைவேற்ற வேலைக்குச்செல்லும் பெண்கள் படும் அவஸ்தைகள், அவர்கட்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள், ஆக்கிரம்ப்புக்களைத் தகர்த்து தலை நிமிரவும் எதிர் நீச்சல் போடவும் வழிசமைக்கும் உனக்கு என் வாழ்த்துக்கள்

என் இதயத்தை உறுத்தும் சந்தேகம் பெண்களுக்கு எதிரிகளாக இருக்கும் பெண்களிடம் தான். இவர்கள் ஏன் இவ்வாறு? இதனை உலகுக்கு உணர்த்த வழிஎன்ன? சிந்தித்த வேளை நீ கிடைத்தாய் நீ தாங்கி வரும் "இலக்கியத்தில் பெண்கள் மீதான வன்முறைகள்" கண்டதும் மெய்சிலிர்த்தேன் . சர்வ பெண்கள் கையில் நீ கிடைத்தால் தலைவி! பெண் உன்னால் பெண்ணாய் துணிவுடன் தலை நிமிர்வாள் உன்சேவை வானோங்கி வளம் பெற என் வாழ்த்துக்கள்.

சாந்தி மகேந்திரன். அலஸ்தோட்டம், திருகோணமலை.

சி. ரூபா, வடமராட்சி, யாழ்ப்பாணம்
ச.ரேணுகா, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
மா. தீபா, ஆரையம்பதி, மட்டக்களப்பு.

அன்புடையீர்,

சொல்லப்படுவது என்ன விடயம் என்பதைவிட யார் அதனைச் சொல்லுகின்றார்கள் என்பதும் அதிக முக்கியமானது என்று கருதுபவர்கள் நாங்கள். உங்கள் மூவருடைய கடிதங்களும், – ஒரே கணனி அச்சுருவில், கையொப்பம் ஒன்றும் இல்லாமல், ஒரே தரமான காகிதத்தில், ஒரே விதமாக தேதியிட்டு, ஒரே விதமாக மடிக்கப்பட்டு கடித உறைக்குள் போடப்பட்டு, ஒரே விதமான தபாலுறையில் ஒரே கையெழுத்தால் முகவரி எழுதப்பட்டு, யாழ்ப்பாணம் என்ற ஒரே தபாலகத்தின் முத்திரை அச்சு குற்றி, தலைவி செய்தி மடலின் ஆசிரியரைத் தனிப்பட்ட முறையில் தூற்றும் ஒரே விடயத்தைத் தாங்கி, எம்மை வந்து சேர்ந்தன. உங்களால் இந்த மொட்டை கடிதங்களின் பிரதிகள் கிடைக்கப்பெற்ற சகோதரிகளும் எம்முடன் தொடர்பு கொண்டு இக்கடிதங்களைப் பற்றித் தெரிவித்தனர். இவையெல்லாம் இந்தக் கடிதங்களின் சூத்திரதாரிகள் ஒரு குழுவினரே என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டின. ஆகவே, யார் சொல்லுகின்றனர் என்பது தெரிவிக்கப்படாததனால் நாம் உங்கள் கடிதங்களைப் பிரசுரிக்கவில்லை.

பொங்குதமிழ் மூலம் ஆற்றல் கண்ட யாழ்ப்பாணத்துப் பெண்கள் நாங்கள், ஆற்றல் கொடுக்க நீங்கள் தேவையில்லை, என்று கூறுகின்றீர்கள். ஆகா நல்ல விசுஷயம். பெண்கள் தற்சார்பு உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதுதான் எமது ஆசையும் கூட. ஆனால் சகோதரிகளே, நாம் குறிப்பிடும் ஆற்றல் பொய்யான பெயர்களுக்குள்ளும் முகவரிகளுக்குள்ளும் ஒளிந்து கொண்டு பிறரை தனிப்பட்ட முறையில் இழிவாகத் தாக்கும் "ஆற்றல்" அல்ல. அல்லது அதிகாரத்தில் உள்ளோரை அண்டி பிழைப்பதும் அரசியலில் குதித்து அடாவடித்தனம் பண்ணும் ஆற்றலும் அல்ல. நல்லறிவுடன் எங்கும் எப்பொழுதும் நீதிக்காகத் துணிந்து நிற்கும் ஆளுமையின் மூலம் தலைமைத்துவம் அடையும் பண்பைத்தான் ஆற்றல் என இணைந்த கரங்களைச் சேர்ந்த நாம் குறிப்பிடுகின்றோம்.

உங்களுக்கு நாம் குறிப்பிடும் ஆற்றல் தேவையென்றால் (தேவையென்றால் தான்) ஒன்று செய்யுங்களேன். தற் துணிவுடன் உங்களுடைய சொந்தப் பெயர்களிலும் முகவரிகளிலும் நீங்கள் எங்களுக்குச் சொல்ல விரும்புகின்ற விஷயங்களை நீங்களாகவே எழுத துணிந்து பாருங்களேன். "யாழில் கால் வைக்க முயற்சி செய்யும் உங்களுக்கு கருணா ஒரு ஊன்றுகோலா", "தேர்தலில் நிற்கும் உள் அவா உங்களைத் தட்டுகின்றதா..", "ஏன் கொழும்பில் ஒரு உடை யாழ் வரும்போது ஒரு உடை என நடிப்பு", "உள் நோக்கு இல்லாது எதையும் செய்ய மாட்டீர்களே", "மட்டக்களப்பு மக்களுக்காக சாதனை செய்தோம் என்றீர்களே என்ன பெரிதாக அடித்து வாங்கி விட்டீர்கள்" என்று சுற்றிச் சுற்றி சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் எம்மைத் திட்டித் தீர்த்துக் குழும்பாமல் உங்கள் பிரச்சனை என்ன என்று நேரடியாகவே கூறுங்கள். அன்றும் இன்றும் என்றும் அப்பழுக்கற்ற நேர்மையுடன் பணியாற்றி வந்துள்ளதனால் பயமின்றிய வாழ்வு வாழ்பவர்கள் நாங்கள். என்ன ஆத்திரங்கள் உங்களுக்குள் இருந்தாலும் அவையெல்லா வற்றையும் பயப்படாமல் நீங்கள் எழுதுங்கள், பிரசுரிப்போம்.

ஆசிரியர்

தொடர்புகளுக்கு : 69, கோயில் வீதி, குருமன்காடு, வவுனியா.
தொ.பே : 024-4589639, viluthu@sri-lanka.net
அச்சிடுவோர் : ஈகுவாலிடி கிரபிக்ஸ், 315 ஜம்பெட்டா வீதி, கொழும்பு 13. தொ.பே : 2389849
26.27 W.A.D. U.DP

படிப்பகம்